www.padippakam.com

# திரு. சபாலிங்கத்தின் படுகொலையை கண்டிக்கின்றோம்!

திரு. சபாலிங்கம் - ஈழவிடுதலைப் போராட்ட முன்னோடிகளில் ஒருவர். சிறீலங்கா பேரினவாத அரசின் மிக மோசமான சித்திரவதைகளுக்குள்ளானவர். புலம் பெயர்ந்த போதும் தேசத்தின் மீது நேசம் கொண்டவர். ஆவணச்சேகரிப்புகளில் ஆர்வம் காட்டிய வர். புகலிடத்து இலக்கிய நடவடிக்கைகளில் பங்கு கொண்டவர். புகலிடத்துக்கும் ஈழத்துக்குமிடையிலான பல்வேறு தொடர்புகளின் மையமாக விளங்கியவர். பலரது இணைப்புப் பாலமாகத்திகழ்ந்தவர்.

ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியினராகிய எமது நடவடிக்கைகள் குறித்து செழுமையான விமர்சனங்களை விமர்சனங்களை முன்வைத்தவர். எமது அரசியல் நடவடிக்கைகளுக்கு பக்கதுணையாக இருந்தவர். எமது தோழர்களின் நல்ல நண்பர். அனைத்துக்கும் மேலாக அராஜகத்தின் அனைத்து வடிவங்களையும் துணிச்சலாக எதிர்த்து நின்றவர்.

இவர் வன்முறைமீது காதல்கொண்ட மனநோயாளிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்- எமது தேசத்தில் அதிபர் ஆனந்தராஜாவிலிருந்து அரசியல் தலைவர் அமிர்தலிங்கம் வரை பல அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், மக்கள் நலன்களில் அக்கறை கொண்டோர் போன்றவர்கள் இரத்தவெறி பிடித்தவர்களால் கொல்லப்பட்டனர். பின்னர் இந்த கொலைக்கரங்கள் இந்தியாவுக்குப் பரவின. எமது தோழர்.பத்மநாபா உட்பட பல அன்புத்தோழர்கள், தொடர்ந்து ராஜீவ்காந்தி போன்றவர் கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இப்போது இந்தக்கொலைக்கரங்கள் புகலிடத்திலும் பரவியுள்ளன. இது புகலிடத்தில் எமது மக்களின் எதிர்கால வாழ்வை சீர்குலைக்கும் செயலாகும். அராஜகத்துக்கும், அடாவடித்தனத்துக்கும் எதிராக யாரும் பேசக்கூடாது, எழுதக்கூடாது என விடுக்கப்பட் டுள்ள அபாய எச்சரிக்கை!

திரு. சபாலிங்கத்தின் மீது தீர்க்கப்பட்ட வேட்டுக்கள் புகலிடத்தில் தனிமனித சுதந்திரத் துக்கு எதிராக தீர்க்கப்பட்ட வேட்டுக்களே! மனிதர்களைக் கொல்வதன் மூலம் மாற்றங் களைத் தடுத்து விடலாம் என எண்ணும் அரசியல் குருடர்களை எண்ணி நாம் பரிதாபப் படுகின்றோம்.

திரு. சபாலிங்கத்தை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கும் அதேவேளையில் தணியாத இரத்த தாகத்தினால் ஒரு குடும்பத்தை நிர்க்கதியாக்கியிருக்கும் கொலைஞர்களை கண்டிக்கின்றோம்.

அராஜகத்தின் அனைத்துவடிவங்களையும் கண்டிக்கத் தாமதப்படுத்தும் ஒவ்வொரு நிமிடமும் நாங்கள் அராஜகவாதிகளின் கரங்களைப் பலப்படுத்துகின்றோம் என்பதை புரிந்து கொள்வோம்.

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

*(சர்வதேசக் கிளைகளின் ஒன்றியம்)*